[1973 மார்ச் 21]

Double decker buses.

*459 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state the details as to how the double decker buses withdrawn from the long distance routes are being utilised at present?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பதினன்கு இரட்டை மாடிப் பேருந்துகளில் மூன்று பேருந்துகளின் அடிச் சட்டங்களில் வெளிப்படையாக விரிசல்கள் காணப் பட்டதால் அவை பணிக்கு உதவாது எனத் தீர்மானித்து அவற்றைப் பொது ஏலத்தில் விற்றுவிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 11 இரட்டைமாடிப் பேருந்துகள் மாவட்டப் பணிப் பேருந்துகளாக மாற்ற ஆணையிடப்பட்டுள்ளது.

புலவர் சி. பழனிச்சாமி : நெடுந்தொலைவுக்கு ஓடிக்கொண்டிருந்த மாடி பஸ்கள் என்னென்ன குறைகள் காரணமாக நிறுத்தப்பட்டுவிட்டன? அந்தக் குறைகளைக் களைந்து மீண்டும் ஓடச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நெடுந்தொலைவு பயணம் செய்கிற பயணிகள் அதில் தங்களுக்குப் போதுமான வசதிகள் இல்லை என்று குறிப்பிட்டதன் காரணமாக அவை நிறுத்தப்பட்டுவிட்டன.

திரு. கு. காமாட்சி : இந்த மாடிப் பேருந்துகளை சென்னையைச் சுற்றிப் பார்க்க வருகிற பயணிகளுக்கு பிக்சட் ரேட் வைத்து டூரிஸ்ட் லக்சுரி பஸ்களாக விடுவதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாடிப் பேருந்துகளில் பயணம் செய்தால் மாநகரம் முழுவதையும் காணலாம் என்ற கருத்தை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மாடி பஸ்களைக் கட்டும்போது அது எத்தனை மைலேஜ் போகவேண்டும் என்று நிர்ணயித்தார்கள்? அந்த அளவுக்கு ஓடியிருக்கிறதா? இல்லையென்றால் அவற்றை ஏலம் விடுவதன்மூலம் அரசுக்கு லாபமா, நஷ்டமா? எவ்வளவு என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்த மாடி பஸகளைக் கட்டும் போது 2 லட்சம் கிலோ மீட்டர் ஓடினால்போதும் என்று நிர்ணயிக்கப்பட்டது. ஒரே ஒரு பஸ் தவிர மற்ற 10 பஸ்கள் அந்த 2 லட்சம் கிலோமீட்டர் தூரம் ஓடியிருக்கிறது. அதனால் அரசுக்கு எந்தவித நஷ்டமும் இல்லை.

திரு. ஏ. எம். இராஜா : மாடி பஸ்களைக் கட்டுவதற்கு அதிகமான செலவு ஆகியிருக்கிறதே. சென்னை வழித்தடங்களில் அவற்றைச் சாதாரண பஸ்களாக வாவது மாற்றிவிடுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அவற்றை நெடுந்தூர வழித் தடங்களில் விடுவதில்லை என்று அரசு தீர்மானித்துவிட்டது. ஆகவே, இருக்கிற மாடி பாஸ்களை சாதாரண பஸ்களாக மாற்ற கிட்டத்தட்ட 4,35,600 ரூபாய் அனுமதித்து, அவைகளை எல்லாம் மாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக் கிறது. மாடி பஸ்களை மாநகரங்களில் விடுவதில் சிக்கலும், சிரமங்களும் இருப் பதால் அப்படி விடுவதற்கில்லை.

திரு. எஸ். நல்லசாமி : பஸ்கள் தேச உடைமை ஆக்கப்பட்டதற்குப் பிறகு வழித்தடங்களில் ஓடிக்கொண்டிருந்த பஸ்களைகூட சில தனியார்கள் நிறுத்தி விட்டார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : நீங்கள் மூலக்கேள்வியை ஒட்டி மாடி பஸ்களைப்பற்றித்தான் கேட்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படி ஏதேனும் குறை இருந் தால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால். ஆவன செய்ய முடியும்.

திரு. எம். சுரேந்திரன் : மாடி பஸ்களுக்கு அதிகமான பணம் செலவழித்து சாதாரணமான பஸ்களாக மாற்றுவதைவிட அதை லக்சுரி கோச்சாகவே வைத்து, தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் அமைத்து, குழந்தைகளின் சுற்றுலாப் பயணத்திற்கு உபயோகப்படுத்தும் யோசனை நல்லது இல்லையா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய யோசனை எதுவும் இல்லை.

வந்தவாசிக்கு விரைவுப் பேருந்துப்பணி

* 460. வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வந்தவாசி-வேலூர், வந்தவாசி-உத்திரமேரூர்-சென்னை துரித வண்டி விட செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : வந்தவாசிக்கும் சென்னைக்கும் அப்படி துரித பஸ் விடுகிற செயற்குறிப்பு இல்லை என்றாலும் திருச்சிக்குச் செல்கிற துரித பஸ்களை